1990 ஏப்ரல் 5]

கைத்தறி கணக்கெடுப்பு.

*475 திரு. பொன். விஜயராகவன்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் முழுமையான கைத்தறி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென மைய அரசின் கைத்தறி மேம்பாட்டு ஆணையர் ஆணை ஏதும் பிறப்பித்துள்ளாரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வீடு வீடாகச் சென்று தேவையான குறிப்புகளைச் சேகரித்து மேற்படி கணக்கெடுப்பைத் முடித்திருக்கிறார்கள்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கெடுப்பின் மூலம் தமிழ்நாட்டில், எத்தனை கைத்தறிகள் இப்போது இருக்கின்றன என்ற விவரத்தை அரசு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கெடுப்பின் மூலம் 1987 ஆம் ஆண்டு கணக்குப்படி 4.27 லட்சம் கைத்தறிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கை எடுப்பதற்கான முகாந்திரம், காரணம் ஏதேனும் தனியாக இருக்கிறதா என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கைத்தறிகளைக் கணக்கிட்டு அதற்கேற்றாற்போல பல்வேறு திட்டங்களை உருவாக்குவதற்கு இப்படிப்பட்ட கணக்குகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.